### தான்வாழும் நிலங்களைப் பிரித்து குறிஞ்சி – முல்லை – மருதம் – நெய்தல் – பாலை என வாழ்ந்த

# தமிழ்மக்களின் நிலை உயர பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன!

## சட்டப்பேரவையில் மயிலை த.வேலு பேச்சு!

**சென்னை, மார்ச்.22-**

**சட்டப்பேரவையில் மயிலை தொகுதி உறுப்பினர் மயிலை த.வேலு பட்ஜெட் மீதான விவாதத்தில் பேசும்போது, தான் வாழும் நிலங்களைப் பிரித்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வாழ்ந்த தமிழ்மக்களின் நிலை உயர பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் மயிலை த.வேலு பேசியதாவது :

மானமும் வீரமும் மிகுந்த தமிழ் இனத்தை வணங்குகிறேன். இன்றைய தமிழ் உலகின் சூழ்நிலையை அன்றைய கலிங்கத்துப் பரணி போர்க் காட்சி ஒன்று நினைவுபடுத்துகிறது.

“விடவிகள் மொடுமொடு விசைபட

முறிபடி எறிபட நெறிபடவே!

அடவிகள் பொடிபட, அருவிகள்

அனல்பட, அருவரை துகள்படவே”

என்று தொடங்கும் பாடலில் மொடுமொடுவென்று மரங்கள் முறிந்து விழுகின்றன, அடவிகள் பொடிபடுகின்றன, மலைகள் தூளாகின்றன, அருவிகள் நெருப்பாகின்றன. ஓசை கேட்கும்போதே, பெரும் படையொன்று எதிர்ப்பட்ட அனைத்தையும் அழித்தொழித்தபடி பாய்ந்து செல்வது தெரிகிறதல்லவா? தமிழ் மறவரின் பெரும் படையோ அதனையும் கடந்து வீறுகொண்டு எழுகிறது, வெற்றியும் பெறுகின்றனர். அன்று அந்த பெரும் கலிங்கத்துப் படையைத் தடுத்து நிறுத்தி, பெரும் வெற்றியை ஈட்டியவர் சோழ குலத்தின் தளபதி கருணாகர தொண்டைமான்! இன்று அதேபோன்றதொரு ஆதிக்கப் படையைத் தடுத்து நிறுத்திக் காட்டிய, தமிழினத்தின் தளபதி முதல்வர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெரும் போரில், அவரின் முதன்மை சிப்பாயாக துணை நிற்பேன் என்று கூறி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

சனாதன எதிர்ப்பு என்ற ஒரு சொல்லால், டெல்லி செங்கோட்டையை அதிர வைத்த, தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், திராவிடத்தின் கொள்கை வாரிசு, எங்கள் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தெளிவான நீண்ட உரையின் மூலம் இனிய தமிழில் தமிழ்நாட்டின் எதிர்கால நிதிநிலை அறிக்கையினை வழங்கிய நிதி அமைச்சர் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர், சட்டமன்ற கொறடா மற்றும் அவையோருக்கு எனது வணக்கங்கள்.

**நாடே போற்றும் நிதிநிலை அறிக்கை!**

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், அறிவு சார்ந்த பேரறிஞர்கள் உட்பட, இன்று நாடே போற்றும் ஒரு ஒளி மறைவில்லாத மக்களைச் சுடாத சூரியனின் நிதிநிலை அறிக்கை. இதை பழந்தமிழர் மரபிலிருந்து நான் பார்க்கிறேன். இனம், மொழி, பாதுகாப்பு. ஒரு மொழியை அழித்தால் அந்த இனத்தின் பெருமையையும், வீரத்தையும் அழித்துவிடலாம் என்ற சிலரின் கனவை சிதைக்கும் வகையில், பறவைக் குஞ்சுகள் வளர்ந்திடும் பருவத்தில், பகையிடமிருந்து பாதுகாக்கும் தாய்ப் பறவையின் போர்க் குணம்போல திட்டத்தைத் தீட்டியிருக்கிறார். திராவிட இயக்கத்தின் அடித்தளமே இன, மொழியுணர்வு, சமூகநீதியும்தான். அந்த வழியில் பேரறிஞர் அண்ணாவால் ‘தமிழ்நாடு’ என்ற பெயரைப் பெற்றோம். முத்தமிழறிஞர் கலைஞரால் ‘செம்மொழி’ என்ற தகுதியைப் பெற்றோம். பெற்றதை வளர்த்தெடுப்பதுதான் தாய்மையின் குணம். அப்படித்தான் இந்த தமிழ்ச் சமூகத்தின் மொழியையும், வரலாற்றுப் பெருமைகளையும் பாதுகாத்திடும் வகையில் திட்டங்களை வகுத்திருக்கிறார். குறிப்பாக, தமிழ்மொழியின் பெருமையாகக் கருதப்படுகிற திருக்குறளை 45 மொழிகளில் வெளியிடுதல். கடல்கொண்ட பழமை நகரமான காவிரிப்பூம்பட்டினம் கடல் ஆய்வு.

தமிழர்களின் பெருமையை மேலும் உயர்த்த பல இடங்களில் அகழ்வாய்வு; தேர்ந்தெடுக்கப்பட்ட 500 தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்; வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக தமிழ் மரபை முறையாக அறிமுகம் செய்திடும் வகையில், 100 தமிழாசிரியர்களைக் கொண்டு அயலக தமிழ் நல வாரியம்மூலம் நேரடி வகுப்புகள் நடத்திடல் ஆகியவற்றிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த உரையில், நம் தமிழ் காக்கும் முதல்வர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்க விழைகிறேன். இந்திக்கும் நாம் எதிரி அல்ல; இந்தி பேசும் மக்களுக்கும் நாம் எதிரி அல்ல. சில அரசியல் தலைவர்கள், சிறந்த கல்வியாளர்கள், பாரம்பரிய பத்திரிகைகள், சிறந்த ஊடகவியலாளர்கள் உட்பட வெளி மாநில நடிகர்கூட நாம் ஏதோ இந்திக்கும், அதைப் பேசும் மக்களுக்கும் எதிரி போன்ற ஒரு மாயையை உருவாக்கிப் பேசி வருகிறார்கள்; அது மிகவும் தவறு. தமிழர்களைப்போல், தமிழ்நாட்டைப்போல், சகிப்புத்தன்மை, சகோதரத்துவம் பேணும் மாநிலம் வேறு எங்கும் இல்லை! அதற்கு உதாரணம்தான் தென் இந்திய இந்தி பிரச்சார சபா; அது தியாகராய நகரில் 1912 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. ஒரு வருடத்தில் இந்தி படிக்க விருப்பமுள்ள 2 இலட்சம் மாணவர்கள் தேர்வு எழுதி வருகிறார்கள். யாரும் அவர்களைத் தடுப்பதும் இல்லை; விமர்சனம் செய்வதும் இல்லை.

**விருப்பப்பட்ட எந்த மொழியையும் கற்கலாம்!**

எப்படி *Alliance francaise* மூலம் பிரெஞ்ச் மொழி கற்று வருகிறார்களோ, *Japanese Dosokai*மூலம் ஜப்பான் மொழி கற்று வருகிறார்களோ, ரஷ்ய கலாச்சார மையம்மூலம் ரஷ்ய மொழி கற்று வருகிறார்களோ, அதேபோன்று, தமிழகத்தில் விருப்பப்பட்டு எந்த மொழியையும் கற்கலாம்; அதை யாரும் தடுப்பது இல்லை; அதற்கான வாய்ப்பு இங்கே கிடைக்கிறது. வடநாட்டிலுள்ள சில அறிவு ஜீவிகளுக்கு அது புரிவது இல்லை. எப்படி இந்தி மொழியைப் பரப்ப இந்தி பிரச்சார சபை உருவாக்கப்பட்டதோ, அதே போன்று தமிழ் மொழியை, அதன் சிறப்பை வெளிமாநில மக்கள் தெரிந்துகொள்ள, ஆர்வமாக விருப்பமுள்ளவர்கள் படிக்க ஏதுவாக, ஒரு தமிழ் வளர்ச்சி சபை உருவாக்கப்பட வேண்டும். இந்திய நாட்டின் முக்கிய நகரங்களான டெல்லி, மும்பை, கல்கத்தா, ஹைதராபாத், பெங்களூரு, போபால் மற்றும் நாக்பூரிலும், நாக்பூரிலும், இதை நான் ஏன் இரண்டுமுறை சொல்கிறேன் என்பது அவையோருக்குத் தெரியும்; தமிழ் வளர்ச்சி சபை உருவாக்கப்பட்டு அடிப்படைத் தமிழ், நடுநிலைத் தமிழ், முதுநிலைத் தமிழ் என்று அண்டை மாநில மக்களுக்கும் தமிழ்மொழியைக் கற்றுக் கொடுக்க முயற்சிகளை எடுக்கலாம். இதன்மூலம், தமிழ் மொழியையும், பெருமையையும், வரலாற்றுச் சிறப்பையும், பண்பாட்டையும், வீரத்தையும் தமிழ் வளர்ச்சியையும் அடுத்த கட்டத்திற்கு நாம் எடுத்துச் செல்ல முடியும்.

அடுத்து, இயற்கையை தெய்வமாக வணங்கிய தமிழ்ச் சமூகம், அந்தத் தமிழ் மரபில் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் இவைகளை பாதுகாத்திட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நிலத்தையும், நீரையும் பாதுகாக்கும் வகையில், கடல்சார் அறக்கட்டளை; ஆறுகள், கால்வாய்களைத் தூர்வாரிட நிதி; தமிழக நதிகளில் கழிவுநீர் கலக்காமல் இருக்க சுத்திகரிப்பு நிலையங்கள்; எரிசக்திமூலம் மின்சாரத் தேவைகளை பலப்படுத்த நிதி; காற்று மாசுபடுவதைத் தடுக்க மின் பேருந்துகளை அதிகப்படுத்துதல்; ஆகாயத்தில் விண்வெளி தொழில்நுட்பத் திட்ட ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்திட நிதி ஒதுக்கீடு; என இப்படி பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனிதர்களின் பிறப்பை வைத்து பிரிந்து வாழ்ந்த சமூகத்திற்கு முன்பே, தான் வாழும் நிலங்களைப் பிரித்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வாழ்ந்த தமிழ் மக்களின் நிலை உயர பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றில், ஒரு சிலவற்றை இங்கே பெருமையோடு குறிப்பிடுகிறேன்.

**மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள்!**

தமிழ்நாட்டின் அடையாளமான கிழக்கு, மேற்கு தொடர்ச்சி மலைகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் வாழும் மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்கு நிதி; கடல் சார்ந்து வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், மீன் இறங்கு தளம், மீன்பிடி வலை பின்னுதல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள்; கால்நடை வளத்தை அதிகரித்து, அதன் மூலம் வேலைவாய்ப்புகளை பெருக்கிடும் திட்டங்கள்; வனப் பகுதியில் அமைந்திருக்கும் சாலைகளைப் பராமரித்து, மேம்படுத்தி பழங்குடிகள் பயன்பெறும் வகையில் சிறப்பான திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் ஒரு வருடத்திற்கு சராசரியாக 28.61 கோடி உள்நாட்டுப் பயணிகளும், 11.75 கோடி வெளிநாட்டுப் பயணிகளும் வந்து செல்வதாக சுற்றுலா துறையின் அறிக்கை கூறுகிறது. அந்த வகையில், இராமேஸ்வரம் பகுதிக்கு பல இலட்சம் உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் வந்து செல்கின்றனர். அவர்களைக் கவரும் வகையில், பாலை நிலப் பகுதி என்று சொல்லக்கூடிய இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் தென் தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் மேம்படுத்தும் வகையில், இராமேஸ்வரத்தில் விமான நிலையம் அமைக்கபடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த தென் தமிழகத்தின் வளர்ச்சி, இளைஞர்களின் வேலைவாய்ப்பு, மக்களின் பொருளாதாரம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்தரம் இந்த விமான நிலையத் திட்டத்தின்மூலம் உயரப் போகிறது. இது ஒரு தொலைநோக்குத் திட்டம் என்று சொல்வதற்கு அப்பாற்பட்டு, இதுவொரு மறுமலர்ச்சி திட்டம் என்றே சொல்லலாம்.

அதுமட்டுமல்ல, சமூக சிந்தனையுடன் உருவாக்கப்பட்ட சில திட்டங்களை இங்கே மன நெகிழ்ச்சியுடன் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தாயுமானவர் திட்டம்**

நான் தாயுமானவன், தந்தையானவன், அன்பு சேவகன், அருமை நாயகன், என்றொரு பாடல் உண்டு. அந்தப் பாடல் வரிகளுக்கேற்ப பேரன்பு நாயகனான நமது முதல்வர் அவர்கள திகழ்கிறார்கள். சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் மக்களையும் தமிழக அரசின் திட்டங்கள் சென்றடைய வேண்டுமென்ற உயரிய நோக்கில் கொண்டுவரப்பட்டதுதான், தாயுமானவர் திட்டம்.

தாயுமானவரின் ஆதரவு கரம் என்பது ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், பெற்றோரை இழந்த குழந்தைகள், ஒற்றை பெற்றோர் கொண்ட குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், சிறப்பு குழந்தைகள் என்று சமூகத்தின் கடைக்கோடியில் கண்டு கொள்ளப்படாமல் இருப்பவரை தேடிக் கண்டுபிடித்து, அவருக்கும் ஆதரவு கரம் நீட்டுவதும், மேலும் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு உதவித் தொகையாக ரூ.2,000 வழங்குவதும் இந்தத் தாயுமானவர் அரசின் உயரிய திட்டம்.

மகளிர் நலனின் நமது முதல்வர் காட்டும் அக்கறையை நினைக்கும்போது, எனக்கு ஒரு சங்கக் கால பாடல் நினைவுக்கு வருகிறது.

“கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே

மூதின் மகளிர்; ஆதல் தகுமே;”

எனும் தொடங்கும் புறநானூற்று பாடலில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. ஒரு பெண் போருக்கு சென்ற சகோதரனை இழக்கிறாள், அடுத்து கணவனை இழக்கிறாள், இருந்தும், துணிச்சலோடு தன் ஒரே நம்பிக்கையான மகனையும், வேல் கொடுத்து போருக்கு சென்று வா என்று அனுப்புகிறாள். சங்கக் காலத் தமிழ்ப் பெண்களின் துணிவை இந்தப் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

அந்தத் துணிவைவும், துணிச்சலையும் மீண்டும் தமிழ் பெண்களின் மனதில் உருவாக்கியது, திராவிட மாடல் அரசின் கடந்த கால திட்டங்கள். அதற்கு மேலும் வலுசேர்த்திடும் வகையில், 10,000 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு, பெண்களின் கருப்பை வாய் புற்றுநோய் தடுப்புத் திட்டம், பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்திடும் திட்டம், தோழி திட்டம் விரிவாக்கம், பாதுகாப்பான மாணவியர் விடுதி போன்றவை முத்தாய்ப்புகளாக இருக்கின்றன.

**முதியோர்களுக்கான அன்பு சோலை திட்டம்!**

தந்தை பெரியாரின் கனவை நினைவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞரின் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டத்தை தொடர்ந்து மேலும் மெருகூட்டும் வகையில் பெண்கள் பெயரில் பதியப்படும் சொத்துக்களுக்கான பதிவு கட்டணத்தின் சலுகை. மேலும் முதியோர்கள் நலன் காத்திட அன்பு சோலை திட்டம் (மணியடிக்கப்பெற்றது)

ஏழைகளின் ஏக்கம், மிகுந்த வாழ்நாள் கனவை நினைவாக்கும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டம். மூன்றாம் பாலினத்தவர்கள் வாழ்வில் உயர வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் தனி கவனம் செலுத்தி உயர் கல்வி படிப்பதற்கு மாதம் 1,000 ரூபாய் என மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை, தமிழகத்தின் அடுத்த தலைமுறை வளர்ச்சியை கருத்தில் கொண்டு மொழி பாதுகாப்பு, சமூக மாற்றம், விவசாயம், கல்வி, சுகாதாரம், கட்டமைப்பு, தொழில் வளர்ச்சி என ஒட்டுமொத்த நலனையும் உள்ளடக்கிய நிதிநிலை அறிக்கையாக இதனை நான் பார்க்கிறேன்.

எல்லோர்க்கும் எல்லாம் என்பதை, சொல்லாக இல்லாமல், செயலாக்கி கொண்டிருக்கிற திராவிட மாடல் ஆட்சி நாயகராக

நம் முதல்வராக இருக்கிறா. ரூ

தமிழ் பகைவர்களை தெறிக்க விடுறரா . .ரூ

அவர்தான் நம் தலைவ . .ரூ (மேசையைத் தட்டும் ஒலி)

என்று கூறி சிதம்பரம் கூட்டத்தில் 1957ல் அறிஞர் அண்ணாவின் உரைவீச்சுடன் எனது நிதிநிலை அறிக்கை மீதான உரையை நிறைவு செய்கிறேன். அண்ணாவின் குரல் ‘ ‘திராவிட பெருங்குடி மக்களே, உங்களுக்கு நான் பெருமையுடன் சொல்லிக்கொள்வேன். நாம் போட்டிருக்கிற இந்த அடித்தளம் சாமானிய மானதல்ல, காலத்தில் கிள்ளி எரியபடக்கூடியதுமல்ல, காதகர்கள் எவ்வளவு பெரிய கல்நெஞ்சத்தை கடபாராயாக்கி கல்லினால் போடப்பட்டிருக்கும் இந்த அடித்தளத்தை அவர்களால் கிள்ளி எறிய முடியாது. அந்தளவிற்கு பலமான அடித்தளம் போட்டாகிவிட்டது” எனும் வைர வரிகளை நினைவுபடுத்துகிறேன்.

**மீனவர்களுக்கான வீடு கட்டும் பணி!**

மெரினா லூப் சாலை கலங்கரை விளக்கம் முதல் பட்டினம்பாக்கம் சீனிவாசபுரம் வரையில் அதிக மீனவ மக்கள் மற்றும் இதர சமூகத்தினர் வாழும் பகுதிகளான கடற்கரை ஓரமுள்ள மிகவும் பின்தங்கிய ஐயாயிரம் குடும்பங்களுக்கு வீடு கட்டும் பணியைத் துரிதமாகத் தொடங்க வேண்டும்.

அந்தச் சாலையில் முன்னேடுக்கும் வளர்ச்சி பணிகள் காரணமாக பெரும்பான்மையாக கடலை நம்பி வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரம் எந்த வகையிலும் பாதிக்காத வகையில் உறுதி செய்திட வேண்டும். மெட்ரோ ரயில் பணி காரணமாக சாந்தோம் நெடுஞ்சாலை ஒரு வழிபாதையாக மாற்றப்பட்டது. தற்போது அந்தப் பகுதியில் மெட்ரோ பணிகள் முடிவடைந்ததால், அந்தச் சாலை இருவழிப் பாதையாக மாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அம்பேத்கர் பாலம் அருகில் பல தலைமுறையாக வசிக்கும் ஆதி திராவிட குடும்பங்களுக்கு வீடுகள் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்றும், தொகுதியில் நடைபெற்று வரும் வாரிய குடியிருப்பு திட்டங்களைதுரிதப்படுத்தி மக்களுக்கு விரைவில் வழங்கிட வேண்டுமென்றும்,

மயிலை கபாலீஸ்வரர் கோயில் சுற்றி போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் திருக்கோயில் வருமானம் பெருகிடவும், காலியாக பயன்பாடற்று கிடக்கும் அறநிலையத் துறைக்கு சொந்தமான வெங்கடேச அக்கரஹாரம் தெருவில் அமைந்துள்ள மிகவும் பாழடைந்த வணிக வளாகம் மற்றும் அதையொட்டியுள்ள பயன்படுத்தாத இடத்தையும் சேர்த்து இடித்துவிட்டு, புதிய வணிக வளாகம் மற்றும் *Multi level car parking* கட்டித் தர ஆவன செய்ய வேண்டும்.

எனது தொகுதியில் கோயில்களுக்கு சொந்தமான நிலங்களில் வசிக்கும் மக்களுக்கு வாடகை உயர்வு தொகையை மறுபரிசீலிக்கவும், *Wakf Board* கீழ் வாடகைக்கு குடியிருக்கும் வீடுகளை வரன்முறை செய்து, வளமோடு வாழ கருணை உள்ளத்தோடு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு மயிலை த.வேலு பேசினார்.



பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பல்லாவரம் ரயில் நிலையம் அருகில் 1000 பேருக்கு நல திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் தா.மோ அன்பரசன் கலந்துகொண்டு நல திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு பாடநூல் நிறுவன கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். அதைத்தொடர்ந்து மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தலைமைக் கழக இளம் பேச்சாளர்கள் பம்மல் வீ. தினேஷ், செல்வி கீர்த்தனா, துணை மேயர் கோ.காமராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன், அ.தமிழ்மாறன், மு.ரஞ்சன், என்.நவீன், கோல்ட் டி.பிரகாஷ், கோ. ஜானகிராமன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

### எஸ்.டி.கருணாநிதி தலைமையில் ந.கோபால் - இரா.சதீஷ்குமார் வரவேற்புரையில்

# திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

### டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - எஸ்.ஏ.எஸ்.ஹாபி சுல்லா - சேலம் சுஜாதா - தாம்பரம் பார்கவி சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச். 22

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் ஹிந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (23.03.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு, சுங்குவார் சத்திரம், சந்தவேலூர் மதுரா, பி.வி.கே. சாமி திடலில் நடைபெறுகிறது.

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியச் செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.டி.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால், திருப் பெரும்புதூர் நகரச் செயலாளர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ஏ.கோதண்டம், நா. சத்யா, சி.வெங்கட், எ. நாசர், மகாலட்சுமி ஜெயக்குமார், சி.பழனி, பி.கங்காதரன், சி. மோகன், ஜெய்சங்கர், கு.சந்தோஷ்குமார், வெங்கடேசன், சேகர், நாராயணன், இஸ்மாயில், பீ. பாண்டியன், கே.சிவபாதம், பி.கலை மோகன், தி.பிரபாகரன், நளினா சின்ன கண்ணு, மா.மணி வண்ணன், ச.வேலுமணி, இ.முனிகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் எஸ்.ஏ.எஸ். ஹபிசுல்லா, கழக மகளிர் அணி பிரச்சாரக்குழுச் செயலாளர் சேலம் சுஜாதா, கழக இளம் பேச்சாளர் தாம்பரம் பார்கவி, கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் திருப் பெரும்புதூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், ஒன்றியக் குழு துணைத் தலைவர் மாலதி போஸ்கோ, நகர மன்றத் தலைவர் சாந்தி சதீஷ்குமார்,

மாவட்ட கவுன்சிலர் ச.பாலா (எ) பால்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் ம.கணேஷ் பாபு, மாவட்ட கவுன்சிலர் ப.இராமமூர்த்தி, நகர்மன்ற துணைத் தலைவர் இந்திராணி சுப்பிரமணி,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் பொடவூர் பி.ரவி, இரா.பிரகாசம், சந்தவேலூர் நா. சத்யா, ஏ.முரளிதரன், இரா. வெங்கடேசன், எஸ்.டி.கே. சபரி ராஜா, ஜி.எஸ்.குமார், கு.ப.முருகன், ஜா.செந்தில் தேவராஜ், எல்.டி.ஜார்ஜ், கோ.விநாயகமூர்த்தி, த.தணிகாசலம், இரா. அருண் பாரத், க.முருகன், ச.தேவேந்திரன், ஏ.டோமினிக், பா.முத்து குமாரசாமி, ஏ.ஹரி கிருஷ்ணன், ஜா.முனிரத்தினம், டாக்டர் ஓவியா முருகன் மற்றும் தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், நகர் கழக நிர்வாகிகள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### நே.சிற்றரசு – தயாநிதிமாறன் - அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் - வினோத் வேலாயுதம் - வெ.கௌதமன் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதியில் நலஉதவிகள் வழங்கும் விழா!

## வினோத் வேலாயுதம் முன்னிலை! அ.குப்பன் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, மார்ச்.22-

கழக தலைவர் தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் நல உதவிகள் வழங்கும் விழா இன்று (22.03.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் கலைஞர் கருணாநிதி நகர் மேற்கு நமச்சிவாயபுரம் சூளைமேடு, சென்னை 600094 எனும் முகவரியில் 109வது வட்டம - மாவட்டப் பிரதிநிதி அ.குப்பன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் வகிக்கிறார்.

ஜெயராணி தலைமையில் நடைபெறுகிறது.

க.சிட்டிபாபு, சு.சண்முகம், ஜி.இளங்கோ, எம். தியாகராஜன், ஜி.பிரசன்னா, ஏ. வெங்கடேசன், எஸ்.ரசுக்குமார், ஆர்.முனிரத்தினம், எம்.அண்ணாமலை, ஏ.மதியழகன், மா. ஏழுமலை, எஸ்.கேபழனி, டி.பாலன், எஸ்.மேட்லின் மேரி, வி.தீபா, பா.ஜீவா, எஸ்.ஜீவரத்தினம் வரவேற்புரையில் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் உள்ள 109வது வட்டத்தில் நலஉதவிகளை சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் , தொகுதி பார்வையாளர் வெ.கௌதமன் ஆகியோர் கலந்து கொண்டு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட நிர்வாகிகள் : து.விக்டர், வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின் பாபு, பகுதி கழக நிர்வாகிகள் : புவி பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன், இதயாத் பாஷா, கமலக்கண்ணன், பொன்னம்மாள், வட்டச் செயலாளர்கள் : க.சிட்டிபாபு, வரதை த.பரி, டேவிட் இன்பராஜ், த.குணசேகரன், தினேஷ் பிரபு, மு.மோகன், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

ஆர்.சி.தாமஸ்ரைட், எஸ்.செல்வக்குமார் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.





திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் கொண்டமநெல்லூர் எளாவூர் அல்லிபூகுளம் மற்றும் ஆர்.என்.கண்டிகை ஆகிய கிராமங்களில் இருந்து தமிழக முதல்வரின் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48’ திட்டத்தில் 05 நபர்கள் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். முன்னாள் மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மருத்துவமனைக்கு நேரில் சென்று நலம் விசாரித்து மற்றும் மருத்துவர்களிடம் உரிய சிகிச்சை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். உடன் கும்மிடிபூண்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் மு.மணிபாலன் மற்றும் மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.